செய்தி வெளியீடு எண்—748 நாள்— 12.9.2008

# செய்தி வெளியீடு

## பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி 1405 ஆயுள் தண்டனைக் கைதிகள் விடுதலை!

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி, தமிழக சிறைச் சாலைகளில் ஆயுள் தண்டனைக் கைதிகளாக உள்ளவர்களில் 15.9.2008 அன்று 7 ஆண்டுகள் சிறைவாசம் முடித்துள்ளவர்களுக்கும், 60 வயதும் அதற்கு மேலாகவும் வயதுள்ள 5 ஆண்டுகள் சிறைவாசம் முடித்துள்ளவர்—களுக்கும் அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி, விடுதலை அளிப்பதென மேதகு ஆளுநர் அவர்களின் ஒப்புதல் பெற்று முடிவு செய்யப் பட்டுள்ளது என்றும், இதன்படி, தமிழகத்தின் பல்வேறு சிறைகளிலிருந்தும் 22 பெண் கைதிகள் உட்பட 1405 ஆயுள் தண்டனைக் கைதிகள் 15.9.2008 அன்று விடுதலை செய்யப் படுவார்கள் என்றும் முதலமைச்சர் கலைஞர் அறிவித்துள்ளார்.

***

வெளியீடு— இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.